DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. 134/2021 Station Kelamangalam PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw7/Pw3/ராஜேஷ்/வி.ஏ.ஓ | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**21.07.2025.**

**1 முதல் 5, 7 மற்றும் 8 எதிரிகள் ஆஜர் .**

**அ.சா.3 முதல் விசாரணை தொடர்ச்சி**

KA02JE8892 என்ற ஹோண்டா ஆக்டிவா மெருன் கலர் வண்டியை திவ்யா ஆஜர் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது கிராம உதவியாளரும் கையெழுத்து செய்துள்ளோம். அன்று காலை 10 மணி அளவில் பெங்களூர் மாத்தேஅள்ளி பகுதியை சேர்ந்த ராமு என்கிறவரின் மகன் ராஜா என்பவர் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவர் கடந்த 1 வருடத்திற்கு முன்பாக இருக்கு மஞ்சுநாத் என்பவரும் திவ்யா என்பவருடனும் பழக்கம் ஏற்பட்டதாக கூறினார். ஒரு நாள் அத்திப்பள்ளியில் திவ்யாவை இவர் சந்தித்தபெழுது திவ்யா தனக்கு கெலமங்கலம் செந்தில் நகர் அருகே முருகன் என்ற புதிய நண்பர் கிடைத்திருப்பதாகவும் அவர் நான் கேட்டபோதெல்லாம் ரூ.30 ஆயிரம், ரூ.20 ஆயிரம், பணம் கொடுப்பதாக கூறியுள்ளார். முருகன் என்பவர் ஸ்ரீராம் பைனான்சில் ரூ.19 லட்சம் டெபாசிட் செய்துள்ளதாகவும், அதன் மெச்யூரிட்டி முடிந்து அவருடைய SBI வங்கிக்கு வரும் பணத்தை 10.06.2021 ம் தேதி அன்று வீட்டில் பணத்தை கொண்டு வைப்பதாக கூறினார். இந்த பணத்தை நாம் எப்படியாவது அடித்துவிடவேண்டும் என்று கூறினார். நீங்கள் என்ன திட்டம் தீட்டினாலும் நான் வருகிறேன் என்று கூறினார். மேலும் இது விசயமாக திவ்யா அவரது நண்பர்களான பிரேம்குமார் (எ) புல்லட், மஞ்சுநாத், மது, ஆகியோர்களிடம் கூறியுள்ளதாகவும் கூறினார். 10.06.2021 ம் தேதி அன்று நீங்கள் கெலமங்கலம் வந்தால் அங்கு முருகனிடம் வேலை செய்யும், அந்தேணி வெங்கடேஷ் என்பவர் வீட்டை அடையாளம் காட்டுவார் என்றும் அதன் படி அன்று மதியம் 12.30 மணியளவில் திவ்யா முருகனுடைய வீட்டிற்கு சென்றுவிட்டார். நாங்கள் எங்களுடைய இருசக்கரவாகனம் மற்றும் டாட்டா ஏஸ் வண்டியில் கெலமங்கலம் வந்தடைந்து முருகன் வீட்டை நோட்டமிட்டோம். சுமார் 2.30 மணி அளவில் பிரேம் குமார் (எ) புல்லட், மது மற்றும் இன்னொருவருடன் முககத்தினை கருப்பு துணியால் மறைத்துக்கொண்டு முருகனின் வீட்டில் நுழைந்தனர். பிறகு 3.00 மணிக்கு வெளியே வந்தனர். நான் திட்டமிட்டபடி முருகனிடம் நகைகளும், பணமும் எடுத்துவிட்டோம். நாம் அத்திப்பள்ளி சென்று விடுவோம். திவ்யா வந்த பிறகு பிரித்துக்கொள்ளலாம் என கூறி அத்திப்பள்ளி சென்றோம். திவ்யா வந்தவுடன் பிரோம் குமார் (எ) புல்லட்டிடம் முருகனிம் பறித்த மோதிரத்தில் ஒன்றை வாங்கிகொண்டார். அவரிடம் இருந்த பணத்தில் அந்தோணிக்கும், வெங்கடேசுக்கும் ரூ.5000 கொடுத்தார். எனக்கும் மஞ்சுநாத்திற்கும் ரூ.5000 கொடுத்தார். பிறகு இந்த நகைகளை விற்று பணமாக்கி கொண்டுவாருங்கள் பிறகு பிரித்துக்கொள்ளாலாம் என கூறி விட்டு அனைவரும்

வீட்டிற்கு சென்றுவிட்டோம். பிறகு எனக்கு பணம் தேவைப்பட்டதால் திவ்வயா முருகனிம் வாங்கி தருவாதாக கூறியிருந்தார். முருகனிடம் பணம் வாங்குவதற்காக செந்தில் நகருக்கு வரும் போது அக்கொண்டப்பள்ளி அருகே போலீசார் என்னிடம் எங்களை விசாரணை செய்து பிடித்தார்கள். இந்த சம்பவத்தை திவ்யா கொடுத்த பணத்தில் செலவு போக ரூ.3800 பணத்தை சம்பவத்திற்கு பயனபடுத்தப்பட்ட KA01 AE 6395 என்ற நீல நிற டாட்டா ஏஸ் வண்டியும் ஒப்படைப்பதாக கூறினார். என்னுடன் வந்தால் முருகனை கட்டிப்போட்டு பணம், நகையும் எடுத்த வீட்டை அடையாளம் காட்டுவதாக வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலம் பிரின்ட் எடுத்தபிறகு ராஜா கையொப்பம் பெற்ற பிறகு நானும் எனது கிராம உதவியாளரும் அதில் கையொப்பம் இட்டோம், பிறகு காவல் ஆயவாளர் கையொப்பம் இட்டார். பிறகு காலை 10.45 மணி அளவில் காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அதை ராஜாவிடம் இருந்து ரூ.3800 ஐயும் வண்டியும் KA 01 AE 6395 என்ற நீல நிற டாட்டா ஏஸ் ஒன்றையும் ஒப்படைத்தார். 2ம் எதிரி ராஜாவிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.5** ஆகும். நானும் எனது கிராம உதவியாளரும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தோம். பிறகு காவல் ஆய்வாளர் மற்றும் காவலருடன் மேற்படி நபர்கள் மற்றும் அவர்கள் வாகனத்தை எடுத்துகொண்டு நாங்கள் கெலமங்கலம் நோக்கி சென்றோம். எங்கள் பின் தொடர்ந்து வாங்கள் என காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். நானும் எனது கிராம உதவியாளரும் அவரை பின் தொடர்ந்து சென்றோம். கெலமங்கலம் 4 ரோடு அருகே காவல் ஆய்வாளர் அங்கு நின்றுகொண்டிருந்த செந்தில் நகரை சேர்ந்த அந்தோணி, மற்றும் வெங்கடேஷ் ஆகியேர்களை மேற்படி குற்றத்திற்கான காரணத்தை சொல்லி அவர்களை பிடித்தார். அப்பொழுது காலை 11.40 மணி அளவில் பிலவேந்தன் என்கிறவரின் மகன் அந்தோணி என்பவர் எவ்வித அச்சுருத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதன் படி அந்ததோணி முருகன் என்பவரிடம் பைனான்ஸ் வசூல் செய்யும் வேலை செய்து வருவதாகவும் அப்போது வெங்கடேஷ் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டதாக கூறினார். முருகன் வீட்டிற்கு திவ்யா என்பவர் அடிக்கடி வந்து செல்லும்போது எங்களுக்கு பழக்கம் இருப்பதாக கூறினார். திவ்யா அந்தோணியிடம் முருகன் ஸ்ரீராம் பைனாஸ்சில் ரூ.19 லட்சம் டெபாசிட் செய்ததாவும் அதன் சூரிட்டி முடிந்து 10.06.2021 ம் தேதி அன்று SBI வங்கிக்கு அவரது Account க்கு வரும் பணத்தை வீட்டிற்கு கொண்டுவந்த வைப்பதாக கூறினார். அந்த பணத்தை நாம் எப்படியாவது அடித்துவிட வேண்டும் என்று கூறினார். நான் ஏற்கனவே பெங்களூரில் உள்ள எங்கள் நண்பர்களான பிரேம்குமார் (எ) புல்லட், மஞ்சுநாத், மது, மற்றும் இன்னொருவரிடம் கூறியுள்ளதாகவும் அவர்கள் கெலமங்கலம் வந்தால் முருகனுடைய வீட்டை அடையாளம் காட்டி உதவுமாறு கேட்டுக்கொண்டதாவும் அதற்கு அவர் சம்மதம் தெரிவித்ததாகவும் கூறினார். அன்று மதியம் 12.30 மணி அளவில் திவ்யா முருகனுடைய வீட்டிற்கு சென்றுவிட்டார். 2.00 மணி அளவில் மேற்படி பிரேம் குமார் (எ) புல்லட், மது, ராஜா, மஞ்சுநாத், மற்றும் இன்னொருவர் அவர்களுடைய இருசக்கரவாகனங்கள், டாட்டா ஏஸ் வண்டியில் இருந்தனார். அவர்களுக்கு முருகனுடைய வீட்டை அடையாளம் காட்டி நானும் வெங்கடேசனும் முருகனுடைய டிவிஎஸ் அப்பாசி வண்டியிலும், ராஜாவும் மஞ்சுநாத்தும் அவருடைய டாட்டா ஏஸ் வண்டியிலு் அந்த பகுதியில் நோட்டமிட்டோம் மதியம் 2.15 மணி அளவில் பிரேம் குமார் என்பவர் மது மற்றும் இன்னொருவர் முகத்தை கருப்பு துணியால் மறைத்துக்கொண்டு முருகனுடைய வீட்டில் நுழைந்தனர்.

பிறகு 3.00 மணிக்கு வெளியே வந்து நாம் திட்டமிட்டப்படி முருகனிடம் நகையும், பணமும் எடுத்துவிட்டதாகவும் நாம் அத்திப்பள்ளிக்கு சென்று திவ்யா வந்த பிறகு பங்குபோட்டுக்கொள்ளலாம் என்று கூறி அத்திப்பள்ளி சென்றதாக கூறினார். பிறகு திவ்யா வந்த பிறகு பிரேம்குமார் (எ) புல்லட்டிடம் முருகனிம் பறித்த மோதிரத்தில் ஒன்றை வாங்கிக்கொண்டார். பிறகு திவ்யா அவரிடம் இருந்த பணத்தில் எனக்கும் வெங்கடேசுக்கும் ரூ.5000, ராஜா, மஞ்சுநாத்திற்கும் ரூ.5000 கொடுத்தாக கூறினார். பிறகு திவ்யா பிரேம் குமார் (எ) புல்லட்டிம் இந்த நகைகளை விற்று பணமாக்கி கொண்டு வாருங்கள் பின்னாடி பிரித்துக்கொள்ளலாம் என்று கூறினார். பிறகு அனைவரும் அவரது வீட்டிற்கு சென்றதாக கூறினார். 12.06.2021 ம் தேதி அன்று நானும் வெங்கடேசும் , மேற்பகடி நகைகளை விற்று பணத்தினை பங்குபெற பெங்களூர் செல்ல இருந்தபோது போலீசர் எங்களை பிடித்துவிட்டாதாக கூறினார். மேலும் இந்த சம்பவத்தில் திவ்யா கொடுத்தபணத்தில் செலவு போக ரூ.4700 மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட TN 70AF 5004 என்ற கருப்பு நிற TVS Appachi வண்டியையும் ஒப்படைப்பதாக கூறினார். மேலும் எங்களுடன் வந்தால் முருகனை கட்டிவைத்து நகையும் பணமும் எடுத்தவீட்டை அடையாளம் காட்டுவதாக எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பிரின்ட் எடுத்துவந்தபிறகு அதில் அந்தோணியும், வெங்கடேசனும் கையொப்பம் இட்டபிறகு நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம் இட்டோம். பிறகு அதில் காவல் ஆய்வாளர் கையொப்பம் இட்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.6** ஆகும். பிறகு நண்பகல் சுமார் 12.30 மணி அளவில் அந்தோணியிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் ரூ.4700, TN 70AF 5004 என்ற கருப்பு நிற TVS Appachi வண்டியையும் கைப்ற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம் இட்டோம். பிறகு அதில் காவல் ஆய்வாளர் கையொப்பம் இட்டார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.7** ஆகும். பிறகு சுமார் 1.00 மணி அளவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை 1 முதல் 5 எதிரிகள்எதிரிகள் தரப்பில்**

நாங்கள் எங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் பதிவு செய்து வட்டாட்சியரிடம் ஒப்படைப்போம் என்றால் சரிதான். காலை 8 மணிக்கு தகவல் வந்தது அப்போது நான் பைரமங்கலம் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தேன். 12.06.2021 அன்று காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை காவல் ஆய்வாளருடன் இருந்தேன். என்னுடைய மேல் அதிகாரியிடம் நான் எந்த உத்தரவும் பெறவில்லை அதற்கான ஆவணங்களை நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. நான் காவல் ஆய்வாளரிடம் இருந்து Acknowledgment எதுவும் வாங்கவில்லை. 1 எம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பு அந்த ஒப்புதல் வாக்குமூலம் உங்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய ஆவணம் என்று சொல்லி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எடுத்த இடத்தில் இருந்து பிரின்ட் எடுக்கும் இடம் சுமார் 100 மீட்டர் இருக்கும். நான்கு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டதால் எந்த தனியார் கம்யூட்டர் சென்டரில் பிரின்ட் எடுத்தார் என்று ஞாபகம் இல்லை. நான், எனது உதவியாளர், காவல் ஆய்வாளர், ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் எதிரி பிரின்ட் எடுக்கும் இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். பிரின்ட் எடுத்த இடத்தில் வாக்குமூலங்களில் உள்ள சங்கதிகளை மாற்ற முடியமா என்றால் இல்லை. முதலாம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்க மோதிரத்தின் அளவு எவ்வளவு

என்றால் 4 கிராம். எல்லா கைப்பற்றுதல் மகஜர் களும் காவல் ஆய்வாளர் தனது கைப்பட எழுதினார் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர்கள் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் தான் எழுதினார். 1ம் எதிரியிடம் இருந்து கைப்பற்ற பட்ட இருசக்கரவாகனத்தின் சேஸ் நம்பர் இருந்தது கைப்பற்றுதல் மகஜரில் அதன் குறிப்புகள் ஆய்வாளர் எடுத்தார் அதன் பின்பு நான் கையெழுத்துபோட்டேன் என்றால் சரிதான்.1வது எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மகஜர் என் முன்பாக கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி 1 ஐ நான் செல்வதற்கு முன்பே கைது செய்திருந்தார்கள் என்றால் இல்லை. நான் செல்வதற்கு முன்பே 2 வது எதிரியும் அங்கு இருந்தார். இந்த வழகில் அவர்களை எப்போது கைது செய்தார்கள் என்ன வாக்மூலம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பணத்தின் டினாமிநேசன் எனக்கு தெரியாது. அது ரூ.100 நோட்டா, ரூ.500, நோட்டா ரூ.2000 நோட்டா என்ற விவரம் எனக்கு தெரியாது. 2ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் பிற்காலத்தில் அது உங்களுக்கு எதிராக திரும்பும் என்று என் முன்னிலையில் கூறவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட டாட்டா ஏஸ் வாகனத்தின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. அங்கு சுமார் 7 பேர் இருநதார்கள். 3 வது எதிரியும் காவல் ஆய்வளார் பிடித்துவைத்திருந்தார். அதன் அடிப்படையில் தான் தெரியும். என் முன்னிலையில் யாரும் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை, எந்த சான்று பொருட்களும் கைப்பற்றபடவில்லை என்றாலும் நான் அரசு தரப்பில் கையிருப்பு சாட்சி என்றாலும் நான் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த மகஜர், ஒப்புதல் வாக்குமூலத்தில கையொப்பம் செய்து விட்டு தற்போது அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7, 8 எதிரிகள் ஆஜர் 7,8 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை அதனால் 7,8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

ஓம்./— எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.